# போகரின் அறிவியல் சிந்தனைகள்

126

**முனைவர் வெ.சிவசங்கர்**
**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை**
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை - **600117**

**ஆய்வுச் சுருக்கம்**

சித்தர்களுள் குறிப்பிடத்தகுந்த போகர் சித்தர் பற்றியும் அவரின் கண்டுபிடிப்புகள் பற்றியும் இன்றைக்கு அனைவரும் அறியவேண்டும் என்னும் கருத்தின் அடிப்படையில் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. பீங்கான், கண்ணாடி, கூண்டு வித்தை என்பன போன்றவற்றையும் பல உபகரணங்களையும் அறிவியல் படைப்புகளையும் உலகிற்குத் தந்தவர் போகர். அதில் மிகவும் சிறப்பு வாய்ந்தவை குடை வித்தை, கெந்தர்வ வித்தை, வான் ரதம், மரக் கப்பல் என்பனவாகும். இவைபோன்ற போன்ற போகரின் செயற்பாடுகளை ஆய்ந்துரைக்கிறது இக்கட்டுரை.

**முன்னுரை**

பூமியில் மனித இனங்கள் விலங்குகளை வேட்டையாடியும் , இறைவனுக்கு நரபலி வழங்கியும் வாழ்வில் வரைமுறை யின்றி வாழ்ந்து வந்தனர் . ஆனால் , சங்க கால த் தமிழன் அப்போதே வாழ்வின் இலக்கணம், சிற்றிலக்கியம் அதிலும் சிறந்து ஒரு படி மேலே போய் அறிவியல் என்று உலகமே வியக்கும் வண்ணம் அதுவரை உலகம் கண்டிராத விண்ணியல் , அது தொடர்பாக உள்ள ஜோதிடம் மற்றும் அரிய அறிவியல் கூறுகள் கொண்டு செய்யப்பட்ட அரும்பெரும் படைப்புகள் , கண்டுபிடிப்புகள் என அறிவியல் துறையின் வி ளிம்பில் காணப்பட்டான் தமிழன் . அவர்களின் அறிவியல் கோட்பாடுகளையும் அதிசய படைப்புகளையும் இன்றளவும் பல உலக அறிவியலாளர்கள் அதிசயித்து ப் பார்க்கும் வண்ணம் வாழ்ந்து வந்துள்ளனர். அதனை மெய்ப்பிக்கும் வகையில் அவர்களது அறிவியல் நுணுக்கங்களும் ஒவ்வொரு கணிப்புகளும் ஒரு போதும் பொய்யாகவில்லை என்று சொன்னால் அது மிகையாகாது .

அறிவியல் கூறுகள்:

"**கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்**
**விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்**"

-நாடுகாண் காதை, இளங்கோவடிகள்.

16ஆம் நூற்றாண்டில் கலிலியோ தொலைநோக்கியைக் கண்டுபிடித்த பின்தான் சனிக்கோளின் அதன் வளையங்களும் கண்டுபிடிக்கப்பட்டன . ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சனிக்கோள் புகைந்து வளையம் போல் புகை சூழ்ந் து அமைந்திருப்பதாக இப்பாடலில் புலவர் இளங்கோவடிகள் நாடுகாண் காதை என்ற இடத்தில் பாடியுள்ளார். இவ்வாறாக, புலவர்களும், முனிவர்களும், சித்தர்களும் உதாரணமாக எழுதி வைத்துள்ள இலக்கியங்கள் , புராணங்கள் , காவியங்கள் என்று பற்பல சான்றுகள் இருக்கின்றன.


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

**பீங்கான்:**

இன்று பீங்கானில் நாம் பயன்படுத்தும் கோப்பை , தட்டு , கிண்ணம் , பூஜாடி , ஊறுகாய் , ஜாடி , பொம்மைகள், குளியலறை உபகரணங்கள் என்று அனைத்தையும் இவ்வுலகிற்கு முதன்முதலில் வழங்கியது போகர் சித்தர் எனலாம்.

**"நாட்டலாம் சீனபதி நடுமையத்தில்**
**நலமான பூநீறு விபரஞ் சொல்வோம்**
**நோட்டமுடன் பூநீராம் மண்ணையப்பா**
**நுணுக்கமுடன் தானெடுத்துக் காய்ச்சும்போது**
**தாட்டிகமா யுவர்மண்ணு சுண்ணாம்பாலே**
**தளிருடனே பிசைகிக்கு களிப்புண்டாகும்**
**வாட்டமுடன் குயவனார் பாண்ட மொய்யாய்**
**வளமையுடன் தான் வகுக்க வளமைகேளே"**

- போகர் சப்தகாண்டம், பா.எண் 2370

உவர்மண், சுண்ணாம்பு இவற்றைக்கொண்டு பீங்கான் தயாரிப்பு முறையை உலகிற்கு ப் பயன்பெறும் வண்ணம் வழங்கியுள்ளார் போகர் . தாம் செய்யும் காயகற்பம் சட்டங்களில் மூலிகைகளை நசுக்கும்போதும்,பஸ்பங்களைச் செய்யும் போதும் பீங்கான் பொருட்களை ப் பயன்படுத்துவது பற்றியும் கூறியுள்ளார். இதில் பயன்படுத்தப்படும் உவர்மண் விருதாச்சலம் , நாமக்கல் , கடப்பா போன்ற பகுதிகளில் இன்றளவும் கிடைக்கின்றது எனலாம்.

**கண்ணாடி:**

**மார்க்கமுடன் கண்ணாடி காய்ச்சி விட்டேன்**
**மயங்காமல் பூநீரைக் கண்டறிந்தேன்**
**தீர்த்தமுடன் வட்டவெளி சேமித்தேன்யான்**
**திறமுடனே பளிங்குயென்ற வட்டஞ்செய்தேன்**
**வார்க்கமுடன் கருக்கட்டி வளவுசெய்தேன்**
**வளமுடனே சூதமுடன் உளவு கண்டேன்**
**பார்க்கையிலே சூதமென்ற கிணறுகண்டேன்**
**பாகமுடன் கண்ணாடிக் கேற்றலாச்சே"**

- போகர் சப்தகாண்டம், பா.2380

உடலினை அலங்கரித்துக் கொள்ள பயன்படும் கண்ணாடியி னைத் தயாரித்துக் கொடுத்த போகர் இதனைச் செய்யும் முறையினை விரிவாக வழங்கியுள்ளார் . போகர் மண்ணைக் கொண்டு காய்ச்சியபின் அதன் பளபளக்கும் பாகை சட்டங்களில் ஊற்றி கண்ணாடி செய்ததாகவும் இதில் பாதரசம் தாக்கிய ஈயத்தைக் காய்ச்சி பூசி தந்ததும் இது முகத்தை க் காட்டும் ஆடி ஆனது என்று கூறுகிறார் போக ர். இதனையே "ப்ளைன்கிளாஸ்" என்று ஆங்கிலத்தில் கூறுகின்றோம் . இதில் போகர் கனிமவளம் பற்றிய நுட்பங்களை அறிந்திருந்தார் என்பது புலனாகிறது . போகரின் மற்றும் ஒரு அரிய படைப்பு கூண்டு வித்தைஎன்பதாகும்.

**"தானானயிது சொல்வேன் கேளும்**
**தகைமையுள்ள இரும்பினிலே காந்தஞ்சேர்த்து**
**பானாகத் தானுருக்கிக் கம்பியாக்கி**

**பாலகனே சிறுகம்பி நூல்போலாக்கி**
**வேனான கூண்டுதான் வடிதான்**
**பத்துவிருப்பமுடன் நீளமது வடிதான்பத்து**
**மானாகநாற்சதுரமாக்கியல்லோ**
**மார்க்கமுடன் கம்பியால் கூண்டுகட்டே”**

- போகர் சப்தகாண்டம், பா.2391

காடுமேடுகளில் பரம்புக்கூடையில் அமர்ந்தவாறு மேலெழுப்பப் பறக்கின்ற கூண்டு வித்தையினைச் செய்யும் செயல் முறைகளை எடுத்துரைக்கிறது போகரின் இப்பாடல் ஆகும். மெல்லிய கம்பியை வைத்து 10 அடி நீளம் மற்றும் 10 அடி அகலம் அளவிற்கு க் கிளி கூண்டு போல ஒன்றை ச் செய்தார் போக ர். இதனைப் பறக்க வைக்கும் முறையினையும் குறிப்பிட்டுள்ளார் (பா.2393).கிளி கூண்டு போல செய்து அதனை நா ர் பட்டுத் துணியால் சுற்றி மூடி , கிண்ணத்தில் கற்பூரம் கொளுத்த பட்டுத்துணி க்குள்ளே காற்று வெப்பமடைந்து கூண்டு ஆகாயத்தில் வேகமாக ச் சட்டென பறக்கும் என்று பாடியுள்ளார் . இதனை ப் பயன்படுத்தி பேரரசர்களும் போக ர் சித்தரை ப் பாராட்டி தொலைதூர ப் பயணத்தையும் எளிதில் கூட்டி ச் சென்று இன்பமாய் வானில் சுற்றிவர ச் செய்தார் போகர் . இது மட்டுமன்றி இதுபோன்று பல உபகரணங்களையும் அறிவியல் படைப்புகளையும் உலகிற்கு த் தந்தவர் போக ர். அ தில் மிகவும் சிறப்பு வாய்ந்தவை குடை வித்தை, கெந்தர்வ வித்தை, வான் ரதம், மரக் கப்பல் என்பனவாகும்.

**முடிவுரை**

பல அறிவியல் கூறுகளின் வாயிலாக அரிய படைப்புகளை வழங்கியுள்ள சித்தர் பெருமான் போகர் ஆவார். தமது அறிவியலி ன் சிந்தனைத் துளிகளை த் தனது போகர் சப்தகாண்டம் என்ற நன்னூலினை வழங்கி அவரது அறிவியல் படைப்புகளுக்கான சான்றாக அனைவரும் பயன்பெறும் வண்ணம் இனிதே வழங்கியுள்ளார். போகர் தமது சித்தர் பெருமக்கள் செய்வித்த அரும்பெரும் சாதனைகளையும் அறிவியல் கூறுகளையும் அறிந்து மக்கள் அனைவரும் பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது .போகர் அருளிய அறிவியல் சிந்தனையில் பெரும் பிரபஞ்ச ரகசியங்க ளும், மக்களுக்குப் பயன்படும் உபகரணங்க ளும் உள்ளன என்பது திண்ணம்.

பார்வை நூல்கள்


- போகர் - சத்தகாண்டம் 7000, கந்தசாமி முதலியாரவர்கள் பதிப்பித்த பிரதிக்கிணங்க சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடு ஸன்ஸ் சக்கரவர்த்தி பிரஸ், 1934.
- சுகுமாரன் (ப.ஆ.) - போகரின் சத்தகாண்டம் 7000 (மின்நூல்)
- இராமச்சந்திரன், எஸ்.பி. - போகமுனிவர் வைத்திய காவியம், தாமரை நூலகம், சென்னை – 26, நான்காம் பதிப்பு, ஆகஸ்டு 2015.
- இராமச்சந்திரன், எஸ்.பி. - போகர் ஞான சூத்திரம் 100 முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை – 26, நான்காம் பதிப்பு, 2017.
- உமா சம்பத் - சித்தமெல்லாம் சிவமயம், பத்ரி சேஷாத்திரி, மதுரை.
- கணபதி, டி.என். - தமிழ்ச் சித்தர் மரபு, ரவி பப்ளிகேஷன்ஸ்,சென்னை – 83, ஆறாம் பதிப்பு, 2015.